நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936
. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil
.நாகர்கோவில் பதிப்பு . 10.02.2026 . மலர் 04 . இதழ் 40. செவ்வாய்க்கிழமை . NAGERCOIL EDITION . 10.02.2026 . VOL 04 . ISSUE 40. TUESDAY . 4 PAGES . Rs.5

## திமுக கூட்டணியில் ராமதாஸா?

# காங்கிரசுக்கு விசிக கண்டனம்

சென்னை, பிப்.10-

'திமுக கூட்டணியில் இடம்பெறுவது குறித்து "திருமாவும் ராமதாஸும் சந்தித்து பேசி சரி செய்துகொள்வார்கள், அவர்களுக்குள் இடைவெளிகள் இல்லை" என செல்வபெருந்தகை கூறியிருப்பதற்கு விடுதலை சிறுத்தைகள் கண்டனம் தெரிவித்துள்ளது.

தி.மு.க கூட்டணியில் ராமதாஸ் இடம்பெறுவாரா என்ற கேள்விக்கு செல்வபெருந்தகை அளித்த பதில் வி.சி.க முகாமை கொதிப்படையவும் செய்திருக்கிறது.

தந்தை மகன் மோதலால் பா.ம.க பிளவடைந்திருக்கும் நிலையில், என்.டி.ஏ கூட்டணியில் ஐக்கியமாகியிருக்கிறார் அன்புமணி. பெரியவர் ராமதாஸ் தி.மு.க கூட்டணிக்கு செல்லலாம் எனப் பேசப்பட்ட சூழலில் 'பா.ம.க, பா.ஜ.க இடம்பெறும் கூட்டணியில் வி.சி.க இருக்காது' என உடைத்துப் பேசியிருந்தார் வி.சி.க தலைவர் திருமாவளவன்.

இச்சூழலில், 'தி.மு.க கூட்டணியில் ராமதாஸ் இணைவாரா?' என்ற கேள்விக்கு செல்வபெருந்தகை, ``தி.மு.க கூட்டணிக்குள் வருவதை தி.மு.க தலைவர் தான் முடிவு செய்யவேண்டும். அதேநேரம் ராமதாஸும், வி.சி.க தலைவர் திருமாவளவனும் நெருக்கமாக இருந்தவர்கள்தான். இருவருக்கும் இடையே இடைவெளி இல்லை. இவருக்கு ஒன்று என்றால் அவர் பேசுவார். விசிக கொடியை ராமதாஸ் ஏற்றியிருக்கிறார். வன்னியர் சங்க கொடியை திருமாவளவன் ஏற்றியிருக்கிறார். இவ்வாறு இணக்கமாக இருந்தவர்கள் தான் இருவரும். எனவே தேவை என்றால் ஒருவருக்கொருவர் சந்தித்து பேசி சரி செய்துகொள்வார்கள். அதை அவர்கள் தான் முடிவு செய்யவேண்டும்' என பதிலளித்தார்.

செல்வபெருந்தகையின் கருத்துக்கு ரியாக்ட் செய்த வி.சி.க திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ் பாலாஜி, "கூட்டணியில் யார் யார் என்பதை தி.மு.க முடிவெடுக்கும் என்பதைதான் நாங்களும் சொல்லி விட்டோமே.

### அவர் இருக்கும் கூட்டணியில் நாங்கள் இருக்க மாட்டோம்!!

சாதியவாத மதவாத சக்திகள் இருக்கும் இடத்தில் இருக்க மாட்டோம் எனும் நிலைப்பாட்டை விசிக மாற்றிக் கொள்ளும் என்கிற தோற்றத்தை திணிப்பது நாகரீகமற்ற அரசியல் அணுகுமுறை" என கண்டித்தார்.

இதுகுறித்து பேசிய வி.சி.க நிர்வாகிகள், "ராமதாஸ் இருக்கும் கூட்டணியில் இருக்க மாட்டோம் என்பதை 14 ஆண்டுகளாக சொல்லிவருகிறது வி.சி.க. சட்டமன்றத் தேர்தல் நெருங்கும் இவ்வேளையில் ராமதாஸ் கூட்டணிக்கு வரலாம் என பேச்சுகள் எழுந்தவுடனேயே வி.சி.க எம்.எல்.ஏ-க்கள் அதற்கு மறுப்பு தெரிவித்தனர்.

அதன்பிறகு, எங்கள் தலைவருமே எங்கள் நிலைப்பாட்டை தெளிவாக சொல்லிவிட்டார். வி.சி.க ஒரு நிலைப்பாட்டை எடுத்துவிட்ட பிறகு 'அவர்களுக்குள் எந்த பிரச்னையுமில்லை.. சந்தித்து பேசினால் சரியாகிவிடும்.. முதல்வர் முடிவெடுப்பார்' எனப் பேசியது சரியல்ல" என்றனர்.

# திமுக கூட்டணியில் விரிசல் தவெகவுக்கு ஜாக்பாட்

நாகர்கோவில், பிப்.10-

தேர்தல் நிலவரத்தை விவரிக்கிறார் மூத்த பத்திரிகையாளரும், அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனருமான முத்துக்குமார்.

திமுகவின் பலமான கூட்டணியில் அங்கம் வகித்துள்ள, காங்கிரஸ் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர்களிடையே ஏற்பட்டுள்ள கருத்து மோதல் திமுக வுக்கு பெரும் தலைவலியை உருவாக்கியுள்ளது.

டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பிளவு பட்ட பாமக யாருடன் கூட்டணி அமைப்பது என்று யோசித்து கொண்டிருக்கிறது. திமுக கூட்டணியில் சேர பாமக முயற்சித்தாலும், அதற்கு முட்டுக்கட்டை போட்டு கொண்டிருக்கிறார் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன். இருவருக்குள் அவ்வளவு கருத்து மோதல் இருந்து கொண்டிருக்கிறது. அப்படி ராமதாஸ் திமுக கூட்டணியிக்கு வந்தாரேயானால் விடுதலை சிறுத்தைகள் கட்சி, திமுக கூட்டணியில் இருந்து வெளியேறும் என்று திருமாவளவன் பகிரங்கமாகவே கூறியுள்ளார்.

இந்நிலையில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வபெருந்தகை பேசும் போது, டாக்டர் ராமதாஸும், திருமாவளவனும் சந்தித்து பேசினால் போதும். திருமாவளவன் ஒத்துக்கொள்வார் என்கிற விதத்தில் வார்த்தைகளை விட்டிருக்கிறார். இது விடுதலை சிறுத்தைகள் கட்சியினருக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. விடுதலை சிறுத்தைகள் கட்சி எம்எல்ஏ பாலாஜி இதனை கண்டிக்கும் விதமாக சமுக வலைதளத்தில் செல்வ பெருந்தகையை விமர்சனம் செய்து தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளார்.

சாதி ரீதியாக செயல்பட்டு வரும் பாமகவை திருமா ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார். அப்படி பாமக, திமுக கூட்டணியில் சேர்ந்தால், நிச்சயம் விடுதலை சிறுத்தைகள் கட்சி திமுக கூட்டணியில் இருந்து வெளியேறும். இதில் எந்த மாற்றமும் இருக்காது என்று சொல்கிறார்களாம் திருமாலின் தம்பிகள்.

இப் பிரச்சினை திமுக வுக்கு பெரும் தலைவலியை தான் கொடுத்துள்ளது. எனவே கடைசி நேரத்தில் திருமாவின் கரமே போதும் என்று திமுக தலைமை வந்து விடும் என்றும் சொல்கிறார்கள் உடன்பிறப்புகள்.

அப்படியானால் பாமக வின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்? டாக்டர் ராமதாஸ் என்ன முடிவெடுக்க போகிறார் என்று கேட்டால், தவெக இருக்கிறது அல்லவா என்று சொல்லுகிறார்கள். ஆக டாக்டர் ராமதாஸை திமுக கூட்டணி ஏற்றுக் கொள்ளவில்லை எனில், விஜயை பக்கம் சாயலாமா என்று பாமகவினர் யோசித்து வருகின்றனராம்.

இது போல் புதிய தமிழகம் கட்சி கூட தவெகவில் கூட்டணி வைக்கலமா என்று யோசித்து கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதிமுக கூட்டணியில் பேச்சு வார்த்தை நடத்தி வரும் டாக்டர் கிருஷ்ணசாமி, ஓட்டப்பிடாரம் தொகுதியை தனக்கு கேட்கிறாராம். ஓட்டப்பிடாரம் தொகுதியில் இதுவரையிலும், 5 முறை போட்டியிட்டு உள்ளார். அதில் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார். எனவே இந்த முறையும் ஓட்டப்பிடாரம் தொகுதி தனக்கே கிடைக்கும் என்று நினைத்திருந்தார். ஆனால் அத்தொகுதி ஜான் பாண்டியனின் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாம் . ஜான் பாண்டியனின் மனைவி பிரிசில்லா பாண்டியன் அதிமுக கூட்டணியில் ஓட்டப்பிடாரம் தொகுதியில்



போட்டியிட இருப்பதாகவும் தெரிகிறது. எனவே மனம் நொந்து போயுள்ள டாக்டர் கிருஷ்ணசாமி கடைசி நேரத்தில் தவெக கூட்டணியில் சேர்ந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை என்று சொல்லுகிறார்கள் அரசியல் கருத்தாளர்கள். ஆக விஜய்யின் தவெகவுக்கு ஜாக்பாட் அடிக்க இருக்கிறது. விஜய் சேலத்திற்கு போயிட்டு வரட்டும்.அப்புறம் பாருங்கள், விஜய்யின் தவெகவுக்கு யாரெல்லாம் தாவுறாங்க என்று..இப்படி பட்ட பேச்சும் வர ஆரம்பித்து விட்டது.

## கோவையை சேர்ந்த மாற்றுத்திறனாளி மிஸ்டர் சவுத் இந்தியா ஆணழகனாக தேர்வு




இராமநாதபுரம்.பிப்.10-

ராமநாதபுரத்தில் நடந்த மிஸ்டர் சவுத் இந்தியா ஆணழகன் போட்டியில் கோவையை சேர்ந்த மாற்றுத்திறனாளி மிஸ்டர் சவுத் இந்தியா ஆணழகனாக தேர்வு செய்யப்பட்டார். இராமநாதபுரம் அப்லிப்ட்மென்ட் டைனமிக்ஸ் சார்பில் தார் கிளாஸிக் 2026, மிஸ்டர் சவுத் இந்தியா 2026, மிஸ்டர் ராம்நாடு 2026 ஆணழகன் போட்டி ராமநாதபுரத்தில் முதல் முறையாக இன்று நடந்தது. இதில் 50, 55, 60, 65, 70, 75, 80+, எடைப்பிரிவு போட்டிகளில் 120 வீரர்கள் கலந்து கொண்டு தங்கள் கட்டுமஸ்தான உடல் அழகு திறனை வெளிப்படுத்தினர். இப்பிரிவுகளில் முதல் 3 இடம் பிடித்த 3 வீரர்களுக்கு ரூ.1000, ரூ.2000, ரூ.3000 பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

அனைத்து பிரிவுகளிலும் முதலிடம் பிடித்த வீரர்கள் மிஸ்டர் சவுத் இந்தியா சாம்பியன் பட்டத்திற்கான இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றனர். இதில் கோயமுத்தூரை சேர்ந்த பேச இயலாத, செவித்திறன் குறைந்த மாற்றுத்திறனாளி சுலைமான் மிஸ்டர் சவுத் இந்தியா சாம்பியனாக தேர்வு செய்யப்பட்டு ரூ.25 ஆயிரம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. கேரளாவை சேர்ந்த முஹமது ரபி ரன்னர் ஆக தேர்வானார்.

இன்டர்நேஷனல் பிட்னஸ் பெடரேஷன் நிர்வாகிகள் ஜெகநாதன், தனசேகரன், மனோஜ் குமார், மகேஸ்வரி. வர்னிகா ஆகியோர் நடுவர்களாக பணியாற்றினர். போட்டிகளில் வென்றோருக்கு மிஸ்டர் ஆசியா, மிஸ்டர் வேர்ல்டு பாடி பில்டர் பயிற்றுநர்கள் விஷால், சரவணா செந்தில் ஆகியோர் பரிசு வழங்கினர்.

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத் தலைவர் நாகேந்திர சேதுபதி, டாக்டர் பரணிகுமார், மண்டபம் மேற்கு ஒன்றிய திமுக செயலர் பிரவீன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர். போட்டியில் வென்ற வீரர்களுக்கு ராமநாதபுரம் சட்ட மன்ற உறுப்பினர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் வாழ்த்து தெரிவித்தார். போட்டியை சிறப்பாக நடத்திய சகத் இளவரசன் இன்டர்நேஷனல் பிட்னஸ் பெடரேஷன் ராமநாதபுரம் மாவட்ட பொதுச்செயலராகவும், பிரசாந்த் பொருளாளராகவும், ஷங்கர் இணைச்செயலராகவும் நியமிக்கப்பட்டனர்.டைனமிக்ஸ் உரிமையாளர் சகத் இளவரசன், பங்குதாரர்கள் கிஷோர், பாலாஜி, சிவபாலன் ஆகியோர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் .மு.க.ஸ்டாலின் திருவள்ளூரில் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் விரிவாக்கத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி பள்ளிகொண்டா பேரூராட்சி அலுவலகம் அருகில் உள்ள சமுதாய கூடத்தில் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கினார். இந்நிகழ்வில் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் .ஏ.பி.நந்தகுமார், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் .மு.பாபு. பள்ளிகொண்டா பேரூராட்சி மன்ற தலைவர் சுபபிரியா, பள்ளிகொண்டா பேரூராட்சி செயல் அலுவலர் (பொ) .க.குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மதுரையில் ஸ்ரீ ஆதித்யா ஸ்கில்டு டெவலப் மெண்ட் அகாடமி நிறுவனம் சார்பில் பள்ளி மாணவர்களின் மாபெரும் வேத கணிதம் வேட்டை உலக சாதனை நிகழ்வு





மதுரை, பிப்ரவரி. 10-

மதுரை கலெக்டர் அலுவலகம் அருகே உள்ள தனியார் பள்ளியில் ஸ்ரீ ஆதித்யா ஸ்கில் டெவலப் மெண்ட் அகாடமியின் நிறுவனர் நந்தினி ஜீவானந்தம், கிராண்ட் யுனிவர்சல் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் நிறுவனர் சேக் முகமது, பாண்டுகுடி ஸ்ரீ லட்சுமி நாராயணா வித்யாலயா சிபிஎஸ்இ பள்ளி மேலாண்மையினர். முதல்வர் ரெஹனா பேகம், இயக்குநர் இலக்கியா கண்ணன், மற்றும் மேலாண்மையினர் தலைமையில் மாணவர்களின் படைப்பில் வேத கணிதம் வேட்டை உலக சாதனை படைக்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில்

வேத கணிதம் என்ற உலக சாதனையின் நோக்கம் மாணவர்களின் வேகமான கணித திறனை வளர்க்கும் வகையில் மாணவர்களிடையே நடத்தப்பட்டது. இந்த வேட்டை நிகழ்வில் மதுரை மாவட்டம் விருதுநகர் மாவட்டம் மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் இருந்து 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள பள்ளி மாணவர்கள் சுமார் 200 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு 200 கணக்குகளை 20 நிமிடங்களில் முடித்து உலக சாதனை படைத்தனர். இதில் அதிகமான மாணவர்கள். வேதிக் அடிப்படையிலான வேகக் கணித வேட்டையை 10 நிமிடங்களில் செய்து பரிசுகளை பெற்றனர். இதற்கான ஏற்பாடுகளை ஆதித்யா ஸ்கில்டு டெவலப் மெண்ட் அகாடமி சார்பில் சிறப்பாக செய்திருந்தனர். மதுரை யாதவா கல்லூரி கணிதத்துறை தலைவர் டாக்டர் எம். அழகப்பன் முதன்மை விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக ஆர்.பாலமுருகானந்தம்

வழக்கறிஞர் -மதுரை கிளை /சட்ட ஆலோசகர் ஸ்ரீ ஆதித்யா அகாடமி இலக்கியவாணி சக்தீஸ்வரி பட்டிமன்ற பேச்சாளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## முதுகுளத்தூரில் அதிமுக மத்திய ஒன்றியம் சார்பில் ஆலோசனை கூட்டம்



முதுகுளத்தூர், பிப்.10-

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் அதிமுக மத்திய ஒன்றியம் சார்பில் கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.டி. செந்தில்குமார் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்ற இக்கூட்டத்தில் திமுக அரசை கண்டித்தும் விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு வழங்காமல் ஏமாற்றும் திமுக அரசை கண்டித்து முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதால் அதில் கலந்து கொள்ள கட்சி நிர்வாகிகளிடம் கலந்து ஆலோசனை நடைபெற்றது. இதில் கிளை கழக செயலாளர்கள் மற்றும் அனைத்து நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சங்கரன்கோவில் நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம் விரிவாக்கம் : ராஜா எம்எல்ஏ பங்கேற்பு



சங்கரன்கோவில், பிப்.10-

தமிழ்நாடு முதலமைச்சர் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணி புரியும் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்தி நேற்று காலை சென்னையில் இருந்து காணொளி காட்சி மூலம் துவக்கி வைத்தார்

அதைத் தொடர்ந்து சங்கரன்கோவில் நகராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு சேர்மன் கௌசல்யா வெங்கடேஷ் தலைமை வகித்தார். நகராட்சி கமிஷனர் (பொ)ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கினார். நிகழ்ச்சியில் நகராட்சி பொறியாளர் இர்வின் ஜெயராஜ், சுகாதார அலுவலர் வெங்கட்ராமன், கட்டிட ஆய்வாளர் சிவசங்கரி, திமுக மாவட்ட பொருளாளர் சரவணன், நகர செயலாளர் பிரகாஷ், நகர மாணவரணி வெங்கடேஷ், ஐ டி விங்க் சிவசங்கரநாராயணன்,நகராட்சி கவுன்சிலர்கள் புனிதா, புஷ்பம், அலமேலு, ராஜா ஆறுமுகம், உமாசங்கர் மற்றும் ஆறுமுகசாமி, ஜெயக்குமார், பாலாஜி,பாரதிராஜா, காவல்கிளி,செல்வகுமார் மற்றும் சுகாதார ஆய்வாளர் கருப்பசாமி, தூய்மை பணியாளர்கள், நகராட்சி பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதில் நகராட்சி தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட 295 பயனாளிகளுக்கு உணவு வழங்கப்பட்டது



தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் மற்றும் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் ஆகியோர் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு பரிமாறினர். உடன் இராமநாதபுரம் நகர் மன்றத்தலைவர் ஆர்.கே.கார்மேகம், இராமநாதபுரம் நகர் மன்ற துணைத்தலைவர் டி.ஆர்.பிரவீன் தங்கம், இராமநாதபுரம் நகராட்சி ஆணையர் அஜிதாபர்வின் ஆகியோர் உள்ளனர்.

# வன விலங்குகளால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும்

## தமிழக விவசாய சங்க மாநில தலைவர் ராமகவுண்டர் கோரிக்கை



கிருஷ்ணகிரி, பிப்.10-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஜெகதேவிஅருகே உள்ள மஜித்கொல்லஹள்ளி கிராமத்தில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் நாரயணசாமி நாயுடுவின் 101-வது பிறந்நாள் விழா மற்றும் விவசாய சங்கத்தின் கிளை சங்கத்தின் திறப்பு விழா நடைப்பெற்றது. தமிழக விவசாய சங்கத்தின் ஆலோசகர் கண்ணையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு கிளை சங்க தலைவர் பாலாஜி, துணைத் தலைவர் முனுசாமி, கிளைச் செயலாளர் கணேஷ் குமார், ஒன்றிய செயலாளர் சண்முகம், ஒன்றிய தலைவர் முனிரத்தினம், மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் சக்திவேல், ஒன்றிய செயலாளர் செல்வராஜ், மாவட்ட துணைச் செயலாளர் சீனிவாசன், மாவட்ட பொறுப்புச் செயலாளர் அனுமந்தராசு, மாவட்ட தலைவர் வரதராஜன் ஆகியோர் முன்னிலை வைத்தனர். மேலும் இந்த விழாவிற்கு தமிழக விவசாய சங்கத்தின் மாநில தலைவர் ராமகவுண்டர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நரசிம்மன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தமிழக விவசாயிகள் சங்கத்தின் நிறுவனத் தலைவர் ஐயா நாராயணசாமி நாயுடுவின் திருஉருவப்படத்திற்கு மலர் துவி மரியாதை செலுத்தி கூட்டத்தில் நிறைவேற்றபட்ட தீர்மானங்கள் குறித்து விளக்க உரை ஆற்றினார்கள். மேலும் இந்தக்கூட்டத்தில் விவசாயிகளுக்கு வங்கி கடன் வழங்க சிபில் ஸ்கோர் பார்ப்பதை உடனடியாக கைவிட வேண்டும், மா விவசாயிகளுக்கு கடந்த மூன்று ஆண்டுகளாக இயற்கை பேரிடர் இழப்பு தொகை வழங்க வேண்டும், அண்டை மாநிலம் போல் மா விளைச்சல் குறையும் போது டன்னுக்கு ரூபாய் 10 ஆயிரம் விதம் உற்பத்தி மானியம் வழங்க வேண்டும், யானை மற்றும் மான் போன்ற காட்டு விலங்குகளால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் உடனடியாக வழங்கப்பட வேண்டும், கே.ஆர்.பி.அணையின் இடதுபுற கால்வாய் மற்றும் வலது புறக் கால்வாய்களை தூர்வாரி சந்தூர் வரையிலான ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், சிங்காரப்பேட்டை அருகே உள்ள கடப்பாறை ஆற்றின் குறுக்கே அணை கட்டி விவசாயத்திற்கு தண்ணீர் கொண்டு செல்ல வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தக் கூட்டத்தில் தமிழக விவசாய சங்கத்தினை சேர்ந்த சுப்பிரமணி ரெட்டி, முனுசாமி, கண்ணப்பன், பாஸ்கர், திம்மராயன், கோவிந்தராஜ் உள்ளிட்ட ஏராளமான விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.

உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை
Whatsapp-ல்
பின் தொடர

# வேலூர் ஹாஜ்புராவில் ஹாஜி அப்துல்லா ஷா காதரி அவுலியா தர்காவில் 312-வது ஆண்டு திருச்சந்தன குடவிழா!



வேலூர், பிப்.10–

வேலூர் அடுத்த கருகம்பத்தூர் ஊராட்சி ஹாஜ்புராவில் ஹாஜி அப்துல்லா ஷா காதரி அவுலியா அவர்களின் 312–வது ஆண்டு திருச்சந்தன குட உருஸ் விழா நடந்தது. இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் திமுக வேலூர் மாவட்ட செயலாளருமான ஏ.பி.நந்தகுமார், வேலூர் மாவட்ட ஊராட்சி சேர்மன் மு. பாபு, வேலூர் ஒன்றிய செயலாளர் சி.எல்.ஞானசேகரன், பொருளாளர் கீ.கோ.ராமலிங்கம் கலந்து கொண்டனர்.

இதில் திமுக கிளை கழக நிர்வாகிகள் ஸ்ரீரங்கன், சாதிக்பாஷா, ராஜி, கே.ஷாஜகான் மற்றும் திமுக சிறுபான்மை பிரிவு மாவட்ட தலைவர் வி.ஏ.சலாம் சிறப்பு விருந்தினர்கள் அனைவரையும் வரவேற்று கௌரவித்தனர். முன்னதாக 2500 பேருக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது.

# வாலிபர் குளத்தில் மூழ்கி பலி

இரணியல்.பிப்.10

இரணியல் அருகே உள்ள தலகுளத்தை சேர்ந்தவர் ராஜேஷ் (29) வெளிநாடு வேலைக்கு செல்ல உள்ள நிலையில் நேற்று மாலை தலக்குளம் ஆலயன் குளக்கரையில் அவரது அண்ணன் சதீஸ் நண்பர்கள் ராஜேஷ் பிரசாத் ஜோயல் ஆகியோர் மது அருந்த வந்துள்ளார்கள் அப்போது மது போதையில் இருந்த ராஜேஸ் குளத்தில் குதித்துள்ளார் அதன்பின் கரை வராத காரணத்தினால் அவரது அண்ணன் குளத்தில் தேடி கண்டுபிடிக்க முடியவில்லை இதுகுறித்து தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்து உள்ளார் தீயணைப்புத்துறையினர் உடலை மீட்டனர் இது குறித்த புகாரின் பேரில் இரணியல் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் முத்து கிருஷ்ணன் உடலை கைப்பற்றி ஆசாரிப் பள்ளம் மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைத்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# சென்னையில் "கிராண்ட் நியூ கஜாஞ்சி நகை கடையை நடிகை பாக்யஸ்ரீ போர்ஸ்" திறந்து வைத்தார்



சென்னை, பிப்ரவரி .10-

சென்னையில்என்.எஸ்.சி. போஸ் சாலை - வால் டேக்ஸ் சாலை சந்திப்பில் "நியூ கிராண்ட் கஜான்சி " நகை கடை ஷோரூமை தொடங்கியது. 50 ஆண்டு கால தங்க வணிகம் செய்து தனித்து நிற்பதோடு, மேலும் ஒரு பிரமாண்டமான புதிய நகைக் கடையை என்.எஸ்.சி .போஸ் சாலையில் உள்ள நகை மையத்தின் சின்னமாக உருவாக்கியுள்ளனர்.

"காந்தா " திரைப்பட நாயகி நடிகை பாக்யஸ்ரீ போர்ஸ் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு ஷோரூமைத் திறந்து வைத்தார்.

என்.எஸ்.சி . போஸ் சாலையில் வேலட் பார்க்கிங் வசதி கொண்ட முதல் ஷோரூம் என்ற புதிய பெருமையை கஜாஞ்சி பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் பேசிய கஜாஞ்சி ஜூவல்லர்ஸ் இணை நிர்வாக இயக்குநர் திரு. ராஜேஷ் மேத்தா, "என்.எஸ்.சி .போஸ் சாலையில் முதன்முறையாக ஒரு நகை ஷோரூமைத் திறப்பது பெருமையான தருணம், நகை வணிகத்தில் எங்கள் பாரம்பரியத்தின் மூலம் இதை நாங்கள் அடைந்துள்ளோம், எங்கள் முழு குடும்பமும் ஒவ்வொரு இயக்கத்தையும் மேம்படுத்த இதில் ஈடுபட்டுள்ளோம்" என்றார்.

தங்க விலையில் தொடக்க சலுகை, ஒரு சவரனுக்கு ரூ. 2500 குறைவு மற்றும் ஒரு காரட்டுக்கு ரூ. 5000 தள்ளுபடி என்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மேலும் நகைகள் மீதான சேதாரம் வெறும் 1% இல் தொடங்குகிறது. வாடிக்கையாளர்கள் இப்போது உற்பத்தி விலையில் நகைகளை வாங்கலாம் என்று அவர் மேலும் கூறினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருவள்ளூர் மாவட்டம், போளிவாக்கத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவுத் திட்டம் விரிவாக்கத்தை தொடங்கி வைத்து, தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கினார். அதனைத்தொடர்ந்து, தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன்ள், மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் தலைமையில் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் பெ.ஜெகன், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் சி.ப்ரியங்கா, ஆகியோர் உள்ளனர்.

# தன்காசி மாவட்டத்தை கொத்தடிமை தொழிலாளர் இல்லாத மாவட்டமாக உருவாக்க அனைவரும் உறுதி ஏற்க வேண்டும்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் வேண்டுகோள்




தென்காசி, பிப்.10-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தொழிலாளர் நலத்துறை சார்பில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 9 ஆம் தேதி கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டத்தில் கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் ஒழிக்க உறுதி மொழி மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. ஆகவே, பொதுமக்கள் கொத்தடிமைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து தென்காசி மாவட்டத்தை கொத்தடிமை தொழிலாளர் இல்லாத மாவட்டமாக உருவாக்க அனைவரும் உறுதி ஏற்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்தார்.

முன்னதாக, கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பு தின உறுதி மொழியினை மாவட்ட வருவாய் அலுவலர் ஏற்றுக்கொள்ள அனைத்து துறை அலுவலர்களும் ஏற்றுக்கொண்டார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) நம்பிராயர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.முத்துராமலிங்கம், தொழிலாளர் துணை ஆய்வாளர் சமுத்திரவேல், தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் மெஹ்தா பாஸ்லின், கிருஷ்ணா ஜீவா, மீனாட்சி, ராமலெட்சுமி, சந்தானகுமார், அழகிய நம்பி, முத்திரை ஆய்வாளர்கள் சபரீசன், நாகராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு செங்குந்தர் பள்ளியில் இலவச கண் சிகிச்சை முகாம்



ஈரோடு நடுநகர் அரிமா சங்கம் சக்தி மசாலா நிறுவனம் ஈரோடு குஜராத் சமாஜ் மற்றும் அரவிந்த் மருத்துவமனை ஆகியவற்றின் சார்பில் ஈரோடு செங்குந்தர் பள்ளியில் . இலவச கண் சிகிச்சை முகாம் நடந்தது. இதில் சுமார் 300 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர் இதில் கண் ஆபரேஷனுக்காக தேர்வு செய்யப்பட்டவர்கள் தனி பஸ் மூலம் கோவை அரவிந்த் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு இலவசமாக கண் ஆபரேஷன் செய்யப்பட்டு மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்படும் என்று நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# மாநகராட்சிகள், நகராட்சிகள். பேரூராட்சிகளில் பணியாற்றி வரும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் : அமைச்சர்கேஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!



சிவகங்கை, பிப்.10-

சிவகங்கை மாவட்டத்தில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணியாற்றி வரும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கானொலி காட்சி வாயிலாக தொடங்கி வைக்கப்பட்ட, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணியாற்றி வரும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத் தொடக்க விழாவில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட தனியார் மஹாலில் நடைபெற்ற விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தலைமையில், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி முன்னிலையில் பங்கேற்று, சிறப்பித்து தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் சீரான வளர்ச்சியை பெற்றிடும் வகையிலும், குறிப்பாக அடித்தட்டு மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கெனவும் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியான முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்கள். குறிப்பாக, தூய்மையான உள்ளம் கொண்டவர்களாகிய தூய்மை பணியாளர்களின் நலனை காக்கின்ற வகையிலும் திட்டங்களை வகுப்பதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நிகராக இதுவரை வேறு எவரும் இல்லை.

மேலும், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோரின் நலன் கருதி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2007 ஆம் ஆண்டு, "தூய்மை பணியாளர் நல வாரியம்" அமைக்கப்பட்டது. இவ் வாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர்களுக்கு விபத்து மரண உதவித்தொகை, இயற்கை மரண நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவி, கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மகப்பேறு நிதியுதவி, கண் கண்ணாடி வாங்க நிதியுதவி, முதியோர் ஓய்வூதியம், வீடு வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமன்றி, தூய்மை பணியாளர்களுக்கு அவர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, பாதுகாப்பு உபகரணங்கள் போன்றவைகளும் வழங்கப்பட்டு வருகிறது. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வழியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தூய்மைப் பணியளார்களின் நலன் காக்கின்ற வகையில், பல்வேறு புதிய திட்டங்களையும் தமிழகத்தில் அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, நமது சுற்றுப்புறத்தினை தூய்மையாக பேணிக்காத்து வரும் தூய்மைப் பணியாளர்களின் நலனில் அக்கறைக் கொண்டு, " மாநகராட்சிகள்,

நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்துள்ளார்கள். முன்னதாக, கடந்த 15.11.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கென முதலமைச்சரின் உணவுத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது தமிழகம் முழுவதும்" மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில், உணவு வழங்கும் திட்டமானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், டெங்கு தடுப்பு பணியாளர்கள், பள்ளி வளாகம் சுத்தம் செய்யும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், நிரந்தர மற்றும் ஒப்பந்த பொது சுகாதார வாகன ஓட்டுநர்கள், நிரந்தர மற்றும் ஒப்பந்த துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் என பல்வேறு நிலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் பயன்பெறவுள்ளனர். அந்தவகையில், சிவகங்கை மாவட்டத்தில், காரைக்குடி மாநகராட்சியில் பணிபுரியும் 84 நிரந்தர தூய்மை பணியாளர்களும், 395 ஒப்பந்த தூய்மை பணியாளர்களும், 132 டெங்கு தடுப்பு பணியாளர்களும், பள்ளி வளாகம் சுத்தம் செய்யும் 62 ஒப்பந்த தூய்மை பணியாளர்களும், சிவகங்கை நகராட்சியில் பணிபுரியும் 195 தூய்மை பணியாளர்களும், தேவகோட்டை நகராட்சியில் பணிபுரியும் 26 நிரந்தர தூய்மை பணியாளர்களும், 1 பொது சுகாதார வாகன ஓட்டுநரும், 104 ஒப்பந்த தூய்மை பணியாளர்களும், 6 ஒப்பந்த துப்புரவு பணி மேற்பார்வையாளர்களும், 16 ஒப்பந்த பொது சுகாதார வாகன ஓட்டுநர்களும், 40 டெங்கு தடுப்பு பணியாளர்களும், பள்ளி வளாகம் சுத்தம் செய்யும் 12 தூய்மை பணியாளர்களும், மானாமதுரை நகராட்சியில் பணிபுரியும் 25 நிரந்தர தூய்மை பணியாளர்களும், 64 ஒப்பந்த தூய்மை பணியாளர்களும், 9 பொது சுகாதார வாகன ஓட்டுநர்களும், 26 டெங்கு தடுப்பு பணியாளர்கள் மற்றும் மாவட்டத்திலுள்ள 11 பேரூராட்சிகளில் பணிபுரியும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், பொது சுகாதார வாகன ஓட்டுநர்கள் என மொத்தம் 643 பணியாளர்களும் என ஆக மொத்தம் சிவகங்கை மாவட்டத்திலுள்ள 1 மாநகராட்சி, 3 நகராட்சிகள் மற்றும் 11 பேரூராட்சிகளில் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து வரும் மொத்தம் 1,840 பணியாளர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறவுள்ளனர். இப்பணியாளர்களுக்கு, உணவு வழங்குவதற்கான கலன்களும் (ஜிவீயீமீஸீ ஸிஷீஜ்) களும் வழங்கப்படுகிறது.

மேலும், சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள், தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம், அளவு ஆகியவற்றில் எவ்வித குறைபாடின்றி முறையாக வழங்குவதை உறுதி செய்திடல் வேண்டும். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில்

தமிழகத்தில் அனைத்து தரப்பு மக்களுக்குமான ஆட்சியினை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கி வருகிறார். அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற்று வரும் பயனாளிகள், அதனை முறையாக பயன்படுத்திக் கொண்டு, வாழ்வில் வளம் பெறவேண்டும் என மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தினைத் தொடங்கி வைத்து, தூய்மை பணியாளர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். முன்னதாக, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்திற்காக, உணவு கொண்டு செல்லும் வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், காரைக்குடி மாநகராட்சி துணை மேயர் ந.குணசேகரன், காரைக்குடி மாநகராட்சி ஆணையாளர் சங்கரன், மாநகர் நல அலுவலர் மரு. வினோத்ராஜா , 19-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. ஹரிதாஸ் துரைராஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், தூய்மைப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# எட்டயபுரத்தில் பாஜக சார்பில் மக்களுக்காக மக்களிடம் இருந்து 2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கை வாகனம் தொடக்கம்




எட்டயபுரம் பிப்ரவரி.10-

தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்தில் பாஜக சார்பில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட துணைத் தலைவர் ஆத்திராஜ், தலைமையில், தூத்துக்குடி வடக்கு மாவட்டத் தலைவர் சரவணகிருஷ்ணன், எட்டையாபுரம் ஒன்றிய தலைவர் சரவண குமார், மாநில பொதுக்குழு உறுப்பினர் ராம்கி, ஆகியோர் முன்னிலையில், மக்களுக்காக மக்களிடமிருந்து 2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கை வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்த பாஜக மாநில பொதுச் செயலாளர் ராம சீனிவாசன், அதற்கு முன்னதாக எட்டையாபுரம் பாரதியார் மணிமண்டபத்தில் மகாகவி பாரதியாரின் முழு திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், விவசாய அணி தலைவர்ஜெய கண்ணன்,இளைஞர் அணி தலைவர் பொன்ராஜ், நெசவாளர் பிரிவு தலைவர் நாகராஜன், ஊடகப்பிரிவு தலைவர் சுந்தராஜன், ஒன்றிய பொதுச் செயலாளர்கள் ஹரிஹரசுதன்,ராமர், காளிராஜ், சேதுராஜ் ,அமுதா ,மாவட்ட பொருளாளர் சீனிவாசன்,கண்ணன், நாகஜோதி சிவா, வெயிலுமுத்து உட்பட கழக நிர்வாகிகள் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு தர்ஹாக்கள் பேரியக்கம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் சேவை விழா




கிருஷ்ணகிரி, பிப். 10–

கிருஷ்ணகிரியை அடுத்த ஜெகதேவி அருகே ஐகுந்தம் கூட்ரோடு பகுதியில் தமிழ்நாடு தர்காக்கள் பேரியக்கம் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவிற்கு தர்காக்கள் பேரியக்கம் மாநில செயலாளர் ஐ.உமர் ஜி தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் தமிழ்நாடு தர்காக்கள் பேரியக்கம் மாநில தலைவர் எம்.ஆசாத்காதிரி வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு மகளிர் காங்கிரஸ் மாநிலத் தலைவி அசினாசையத், மற்றும் புதுச்சேரி காங்கிரஸ் முன்னாள் அமைச்சர் கந்தசாமி ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஒரு கோடி ரூபாய் அளவிற்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இதில் பர்கூர் மாற்றுத்திறனாளி பள்ளிக்கு நிதி உதவி, முதியோர்களுக்கு உதவித்தொகை, ஆதரவற்ற குழந்தைகளின் பெயரில் பிக்சட் டெபாசிட், 2000 பெண்களுக்கு புடவை, ஆட்டோ ஓட்டுனருக்கு சீருடைகள், உள்ளிட்ட ஏராளமான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்த விழாவில் தமிழ்நாடு தர்காக்கள் பேரியக்க மாநில துணைத்தலைவர் பாவா ஷாகிப், மாநில கவுரவத் தலைவர் அல்ஹாஜ் ஜி எம் ஹசன் குத்துசாகிப், மாநில அமைப்பாளர் முஸ்தபா தங்கள், மாநில பொதுச் செயலாளர் சாஜாத் ஹுசைன், மாநில முதன்மைச் செயலாளர் முகமது அபுதாஹிர், மாநில ஆலோசகர் அஷ்ரப் அலிஹாசியார், திருச்சி மாவட்ட தலைவர் ரஷீத் கலந்தர், நாகை மாவட்ட தலைவர் சுல்தான் சாகிப், தென்காசி மாவட்ட தலைவர் முகமது கமாலுதீன், கௌரவத் தலைவர் கோயம்புத்தூர் போர்வெல் ஹைதர் அலி, திருச்சி மாவட்ட செயலாளர் சமீமுகமது, ஒருங்கிணைப்பாளர் ஜியா முகமது, தென்காசி மாவட்ட செயலாளர் நாகூர் மீரான், கிருஷ்ணகிரி மாவட்ட அமைப்பாளர் முகமத் நூர், மாவட்ட இளைஞர் அணி இர்ஷாத், துணை இளைஞரணி நயாஸ், ஆலோசகர் சிக்கந்தர், ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருச்சி, கரூர், குளித்தலை, மாவட்ட, நகர, நிர்வாகிகள் முகமது கௌஸ், மன்சூர், சிராஜுதீன், இம்தியாஸ் அகமது, தோஸ்த்கான், சர்புதீன், இப்ராஹிம் சஞ்சீவ், நூர் முகமது, நவ்ஷாத், ஏஜாஸ், ஆரிப், பைசூ, கிருஷ்ணகிரி நகர நிர்வாகிகளான நகர அமைப்பாளர் விஷ்ணு பிரபு, ஜனாப், நகரப் பொருளாளர் சுகேல், நகர துணை அமைப்பாளர்கள் ஜாபர், உசேன், அப்பாஸ், ஜெலில், நகர இணை அமைப்பாளர்கள் ஜனாப்அசேன், இஸ்மாயில், அல்லாபகஸ், சல்மான், கலாம், நகர இளைஞரணி அமைப்பாளர்கள் ஜனாப், அப்சல், நவீத், காதர், நாசீர், ஹாஜி, ஜாபர், உள்ளிட்ட பலரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். தமிழ்நாடு தர்காக்கள் பேரியக்கம் நகரச் செயலாளர் அஷ்ரப் அலி இறுதியாக நன்றியுரை ஆற்றினார்.

# அணைக்கட்டில் முன்னாள் முப்படை வீரர்கள் நலச்சங்க நான்காம் ஆண்டு பொதுக்குழு



வேலூர், பிப்.10-

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு வட்டார முன்னாள் முப்படை வீரர்கள் நலச்சங்கத்தின் நான்காம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் அணைக்கட்டில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு சங்கத்தின் தலைவர் ஏ.டி.வேலாயுதம் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் கே.சிவகுமார் செயலாளர் வரதராஜன், பொருளாளர் ஜெயச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக கர்னல் கங்காதரன் பங்கேற்று சிறப்புரையாற்றினார். இதில் சட்ட ஆலோசகர் சரவணகுமார், சங்க ஆலோசகர் தங்கவேல் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். பொதுக்குழுவில் அணைக்கட்டு தாலூக்காவிற்கு சிஷிஞ் கேன்டின் மற்றும் ணிசிபிஷி வசதி வேண்டும். வேலூர் மாவட்டத்தில் உள்ள முன்னால் முப்படை வீரர்கள், வீர மங்கையர்கள் அவர்கள் குடும்பத்தை சார்ந்தவர்களுக்கு சிகிச்சை பெற சிஎம்சி, நாராயணி,மற்றும் நருவி மருத்துவமனையில் அனுமதி வழங்க வேண்டும். ஜவான் பவன் புனரமைக்க வேண்டும். வேலூர் மாவட்டத்தில் கேந்திரிய வித்யாலயா பள்ளி துவங்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# 71 வருட மணி பள்ளி முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைக்கும் மணி பள்ளி முன்னாள் மாணவர்கள் அசோசியேஷன் துவக்கம்!




கோவை, பிப்.10-

71 வருட மணி பள்ளி முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைக்கும் மணி பள்ளி முன்னாள் மாணவர்கள் அசோசியேஷன் துவங்கப்பட்டுள்ளது. மணிப்பள்ளி 1954 ஆம் வருடம் துவங்கி இன்று வரை 71 வருட மாணவர்களை பல்வேறு உச்ச நிலைக்கு தகுதிப்படுத்தி உள்ளது. இந்த 71 வருட மாணவர்களை ஒன்றிணைக்கும் முயற்சியாக முன்னாள் மாணவர்கள் அமைப்பை உருவாக்கியுள்ளார்கள்.

இந்த அமைப்பின் நிர்வாகிகள் பேசுகையில்,மணி பள்ளியானது சுமார் 10,000 மேற்பட்ட மருத்துவர்கள்,அரசு அலுவலர்கள், தனியார் துறை உச்ச நிலை அதிகாரிகள், தொழில் முனைவோர்கள், தொழிலதிபர்கள் என பல்வேறு நிலைக்கு மாணவர்களை உயர்த்தியுள்ளது. இந்த மாணவர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் முயற்சியாக மிக விரைவில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நடைபெற உள்ளது.

இந்த சந்திப்பை முன்னாள் மாணவர்கள் அமைப்பு திறம்பட செய்ய உள்ளது என்றார்கள். மேலும் பேசுகையில், இந்த முன்னாள் மாணவர்கள் அமைப்பின் மூலம் கல்வி உதவித்தொகை, மருத்துவ உதவி, விளையாட்டில் ஆர்வம் இருந்து வசதி இல்லாமல் இருக்கும் மாணவர்களை ஊக்குவித்தல், உயர்கல்வி படிக்க உதவுதல்,அரசு தேர்வுக்கு தகுதியாக பயிற்சி அளித்தல், உயர்கல்விக்கு வழிகாட்டுதல் என பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள உள்ளோம் இத்தகைய முயற்சிக்கு அனைத்து முன்னாள் மாணவர்களும் முன்வந்து நமது பள்ளியை பெருமை அடைய செய்வோம் என்றார்கள்.




# குலசேகரம் அருகே மருமகளுக்கு வரதட்சணை கொடுமையுடன் பாலியல் தொல்லை : மாமனார் உட்பட 3 பேர் மீது வழக்கு

மார்த்தாண்டம், பிப். 10-

குலசேகரம் அருகே உண்ணியூர் கோணம் பகுதியை சேர்ந்தவர் ராஜய்யன் (65) இவரது மகன் ரதீஷ் (34) என்பவருக்கும் மோனிஷா (28) என்பவருக்கும் கடந்த 2024 ஆம் ஆண்டு திருமணம் நடந்துள்ளது. அப்போது அதிக வரதட்சனை கொடுத்து இந்த திருமண நடந்துள்ளது. இந்த நிலையில் திருமணம் ஆன சிறிது நாளில் மோனிஷாவின் கணவர், மாமனார் ராஜய்யன், மாமியார் விஜயா ஆகிய 3 பேரும் சேர்ந்து அதிக வரதட்சணை கேட்டு தகாத வார்த்தைகளால் திட்டி வந்துள்ளனர்.

இதற்கு இடையில் ரதிஷ் வேலைக்கு சென்ற பிறகு மோனிஷா இருக்கும் அறைக்குள் சென்ற மாமனார் ராஜய்யன் தனது ஆசைக்கு இணங்குமாறு பாலியல் ரீதியாக தொந்தரவு செய்து வந்துள்ளதாக தெரிகிறது. இதை கணவரிடம் கூறியும் கணவரும் கண்டு கொள்ளவில்லை என்று என்று கூறப்படுகிறது.

இதனால் மன வேதனை அடைந்த மோனிஷா தனது பெற்றோரிடம் சம்பவத்தை கூறியுள்ளார். இந்த சம்பவத்தை தட்டிக் கேட்க மோனிஷாவின் பெற்றோர் அங்கு சென்றபோது அவர்களையும் திட்டி, ரதீஷுக்கு வேறு திருமணம் செய்ய திட்டமிட்டனர். பாதிக்கப்பட்ட மோனிஷா இது குறித்து பத்மநாபபுரம் குடும்ப நல நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். புகாரை விசாரித்த நீதிமன்றம் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க மார்த்தாண்டம் அனைத்து மகளிர் போலிசாருக்கு உத்தரவிட்டது. மகளிர் போலீஸ் சார்பாக வரதட்சணை கேட்ட கணவர் , பாலியல் துன்புறுத்தல் செய்த மாமனார், அதற்கு உடந்தையாக இருந்த மாமியார் என 3 பேரும் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தேங்காப்பட்டணம் அருகே கடலில் முத்து குளிக்க சென்ற மீனவர் மூச்சுத் திணறி உயிரிழப்பு



புதுக்கடை, பிப்.10-

இனயம் நடுத்தேரி பகுதியை சேர்ந்தவர் அந்தோணிப்பிள்ளை மகன் ஏசுபாலன் (46). இவருடன் அதே பகுதியை சேர்ந்த ஆன்றோரெதிஷ் (37 ) ,அமலதாசன் (40 )ஆகிய 3 பேரும் சேர்ந்து தேங்காப்பட்டணம் அருகே கடலில் பாறைகளுக்கு இடையில் ஆக்சிஜன் சிலிண்டர் உதவியுடன் முத்து குளித்துக் கொண்டிருந்தனர். திடீரென மூன்று பேருக்கும் மூச்சுத்திணறல் ஏற்பட்டது. உடனடியாக 3 பேரையும் ஆம்புலன்ஸ் மூலம் நாகர்கோவில் உள்ள வெவ்வேறு ஆஸ்பத்திரியில் சிகிட்சைக்கு அனுமதித்தினர். இதில் சிகிச்சை பலனளிக்காமல் ஏசுபாலன் பரிதாபமாக உயிரிழந்தார். அவருடைய முத்து குளிக்க சென்ற இருவரும் தீவிர சிகிச்சையில் உள்ளனர். இது குறித்து புதுக்கடை காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# தொண்டி, நம்புதாளையில் மமக 18 ம் ஆண்டு துவக்க விழா



ராமநாதபுரம், பிப்.10-

மனிதநேய மக்கள் கட்சி 18-ம் ஆண்டு துவக்க விழா நிகழ்வை முன்னிட்டு தொண்டியில் அன்பாலையா ஆதரவற்றோர் குழந்தைகள் உண்டு உறைவிடப்பள்ளி குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கியும் நம்புதாளை கிளை சார்பில் இனிப்புகள் நலதிட்ட உதவிகள் வழங்கியும் கொண்டாடப்பட்டது.

மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் வழக்கறிஞர் ஜிஃப்ரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமுமுக மாநில செயலாளர் தொண்டி சாதிக் பாட்சா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் தொண்டியை சேர்ந்த ஜாகிர் உசேன், பீட்டர், நாகூர் பிச்சை, மற்றும் நம்புதாளையை சேர்ந்த ஜபருல்லா, மாஸ் ஜகுபர், ஆகியோர் தங்களை மாவட்ட தலைவர் முன்னிலையில் மனித நேய மக்கள் கட்சியில் இணைத்து கொண்டனர். மேலும் இந்த கொண்டாட்ட தினத்தில் கழக மூத்த உறுப்பினர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மமக மாவட்ட துணை தலைவர் நம்புதாளை சாகுல் ஹமீது, மமக மாவட்ட துணை செயலாளர் கவுன்சிலர் பெரியசாமி, மாநில செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் பாஸ்கர், மாவட்ட செயற்குழு உறுப்பினர் பொறியாளர் ரகு , தொண்டி பேரூர் தலைவர் காதர் துணை தலைவர் எம்.ஆர்.பட்டிணம் அலாவுதீன், பேரூர் மமக செயலாளர் பரகத் அலி, பேரூர் தமுமுக செயலாளர் முகைதீன் பிச்சை, பேரூர் பொருளாளர் ஹம்மாது சேகு, நம்மபுதாளை கிளை தலைவர் சேகு நெய்னா, கிளை தமுமுக செயலாளர் ஜாசிர் அகமது, தொண்டி பேரூர் நிர்வாகிகள் பி.வி.பட்டிணம் ஜலால், பேரூர் எஸ்எம்ஐ பொருளார் நவ்ஃபிக், லியாகத் அலி, இபுராஹிம் , பௌசுல், ரிஸ்வான், சேனா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# பாஜக கேரளாவின் பார்டர் வரைகூட வர முடியும் ஆனால் தமிழ்நாட்டுக்குள் கால் எடுத்து கூட வைக்க முடியாது

## திருப்பூரில் மனித நேய மக்கள் கட்சியின் 18ம் ஆண்டு துவக்க விழாவில் திராவிடர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் மதிவதனி பேச்சு




திருப்பூர், பிப்ரவரி.10-

திருப்பூரில் மனித நேய மக்கள் கட்சியின் 18 ஆம் ஆண்டு துவக்க விழா திருப்பூர் வடக்கு மாவட்டம் கோல்டன் நகர் பகுதியில் அரசியல் சாசனம் தந்துள்ள மக்களின் வாழ்வுரிமை, வாக்குரிமை,வழிபாட்டு உரிமை அனைத்து மக்களுக்கும் கிடைத்திட வேண்டும் என்பதை வலியுறுத்தி அரசியல் எழுச்சி பொதுக்கூட்டம் மனிதநேய மக்கள் கட்சியின் கிளை தலைவர்.சிக்கந்தர் பாட்ஷா, மாவட்ட துணைச் செயலாளர் பாபுஜி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மனிதநேய மக்கள் கட்சியின் தலைமைக் கழக பேச்சாளர். கோவை சையது, திருப்பூர் மாநகராட்சியின் மேயர்.தினேஷ் குமார், திராவிடர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர். வழக்கறிஞர் மதிவதனி உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். தொடர்ந்து பொதுமக்கள் இடையே பேசிய திராவிடர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் மதிவதனி மத்திய அமைச்சர் அமித்ஷா கூறுகிறார் குஜராத்தை முடித்து விட்டோம் அடுத்த இலக்கு தமிழ்நாடு தான் என்ற பேச்சுக்கு பதில் அளிக்கையில் பாரதிய ஜனதா கட்சி கேரளாவின் பார்டர் வரை கூட வர முடியும் ஆனால் தமிழ்நாட்டுக்குள் ஒருபோதும் கால் எடுத்து வைக்க முடியாது என்றும் மனித நேயத்திற்கும் பிஜேபிக்கும் வெகு தூரம் என்றும் மனித நேயம் என்றால் கிலோ எவ்வளவு என்று கேட்பார்கள் பாஜகவினர் மேலும் முகத்தை காட்டிக்கொண்டு திருப்பூர்,கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கு வந்தால் மக்கள் நம்ப மாட்டார்கள் அதற்காகத்தான் இலையோடு வருகிறார்கள் என்றும் இலையோடு வந்தாலும் பூவோடு வந்தாலும் தமிழகத்தில் பாஜக வேரோடு அகற்றப்படுவார்கள் என்றும் மனித குலத்திற்கு எதிரான ஒரு கட்சி இருக்கிறது என்றால் அது பாரதிய ஜனதா கட்சி தான் என்றும் 2026 ஆம் ஆண்டு மனித நேய மக்கள் கட்சியின் ஒத்துழைப்போடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிதான் என்றும் பேசினார். இந்த நிகழ்ச்சியில் மனிதநேய மக்கள் கட்சியின் நிர்வாகிகளும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகளும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# வாலிபருடன் கள்ளத்தொடர்பில் இருந்த இளம் பெண்ணை வெட்டிக்கொன்ற உறவினர்



இரணியல், பிப்.10-

திங்கள்சந்தை அருகே வாலிபருடன் கள்ளத்தொடர்பில் இருந்த இளம் பெண்ணை உறவினர் வெட்டி கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கொலையாளி கைது செய்யப்பட்ட நிலையில் கள்ளக்காதலனை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

திங்கள்சந்தை அருகே உள்ள தலக்குளம் குலாளர்தெரு பகுதியை சேர்ந்தவர் ராமகிருஷ்ணன். இவரது மனைவி சுந்தரி. இவர்களது மகள் சுபிதா (28). சுபிதா கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு அதே பகுதியை சேர்ந்த அருண்பிரசாத் (34) என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு 9 மற்றும் 5 வயதில் 2 மகன்கள் உள்ளனர்.

அருண்பிரசாத் கார்பன்டர் வேலை செய்து வருகிறார். சுபிதா அந்தப் பகுதியில் உள்ள அரசு பள்ளியில் காலை உணவு திட்டத்தில் உணவு சமைக்கும் தொழில் செய்து வந்துள்ளார். அப்போது அவருக்கும் தும்பவிளை காலணியை சேர்ந்த அனீஸ் (30) என்பவருக்கும் கள்ள தொடர்பு ஏற்பட்டதாக தெரிகிறது. செல்போன் எண்களை பரிமாறிக் கொண்ட அவர்கள் அடிக்கடி தனியாகவும் சந்தித்து வந்துள்ளனர்.

இதை கண்டித்ததால் சுபிதாவுக்கும் அருண்பிரசாத்திற்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இதனால் கோபித்து கொண்டு சுபிதா அவரது தாயார் வீட்டுக்கு வந்து விட்டார். தற்போது நாகர்கோவிலில் உள்ள பிரபல துணிக்கடையில் வேலை பார்த்து வந்தார். சுபிதா தந்தை ராமகிருஷ்ணன் இறந்து விட்டார். வீட்டில் தாயார் சுந்தரி மற்றும் அவரது 2 மகன்களும் வசித்து வந்தனர். மகன்கள் அவ்வப்போது அருண் பிரசாத் வீட்டிற்கு சென்று அங்கேயும் தங்கி விடுவதும் உண்டு.

தாய் வீட்டிற்கு வந்த பிறகும் சுந்தரி, அனீசுடன் உள்ள கள்ள தொடர்பை தொடர்ந்துள்ளார். யாரும் இல்லாத போது வீட்டிற்கு அனீஸை வரவழைத்து அவ்வப்போது தனிமையில் உல்லாசமாகவும் இருந்து வந்துள்ளனர். இதைப் பார்த்த சுபிதாவின் உறவினர்கள் கண்டித்துள்ளனர். இருந்தாலும் இந்த கள்ள தொடர்பை அவர் விடவில்லை. சுபிதா கடந்த 2 நாட்களாக வேலைக்கு செல்லாமல் விடுப்பு எடுத்து வீட்டில் இருந்து வந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அனீசுடன் சுபிதா செல்போனில் பேசிக்கொண்டு இருந்துள்ளார். இதை பார்த்த சுபிதாவின் சித்தப்பா ராஜேஷ் (45) என்பவர் இது குறித்து சுபிதாவிடம் கேட்டுள்ளார். அப்போது அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டுள்ளது. இருவரும் மாறி மாறி தாக்கி கொண்டதாகவும் கூறப்படுகிறது. மாற்றுதிறனாளியான ராஜேஷ் ஒரு கால் இல்லாததால் மரக்கால் உதவியுடன் நடந்து வருகிறார். இதனால் நிலை குலைந்து கீழே விழுந்த ராஜேஷ் அங்கு கிடந்த அரிவாளை எடுத்து சுபிதாவை தலை, கை உள்ளிட்ட இடங்களில் வெட்டியதாக கூறப்படுகிறது.

ரத்த காயம் ஏற்பட்ட சுபிதா படுக்கை அறைக்குள் சென்று உள்பக்கமாக கதவை பூட்டிக் கொண்டதாக கூறப்படுகிறது. இதனிடையே நேற்று காலை சுபிதாவின் படுக்கை அறை திறக்கப்படவில்லை. அவரை அழைத்தும் அங்கிருந்து எந்த பதிலும் வரவில்லை. இதனால் சந்தேகம் அடைந்த உறவினர்கள் கதவை உடைத்து உள்ளே பார்த்தபோது சுபிதா தரையில் ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்தார். வெட்டுக்காயம் ஏற்பட்ட சுபிதா அறைக்குள் சென்று கதவைப் பூட்டி கொண்டதால் அதிக அளவில் ரத்தம் வெளியேறி இறந்திருக்கலாம் என போலீசார் கருதுகின்றனர்.

இது குறித்து தகவல் அறிந்த இரணியல் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சம்பவம் குறித்து சுந்தரியின் தாயார் சுந்தரி இரணியல் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். ராஜேஷ் இரணியல் காவல் நிலையத்தில் சரணடைந்தார். அவரை கைது செய்த போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். வாலிபருடன் கள்ளத்தொடர்பில் இருந்த இளம்பெண் உறவினரால் வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

2 ஆண்டுகளுக்கு முன்பே அனீசுடன் சென்ற சுபிதா

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு சுபிதா, அனீசை வீட்டிற்கு வரவழைத்து யாருக்கும் தெரியாமல் ஒரு அறையில் தங்க வைத்துள்ளார். சந்தேகம் அடைந்த உறவினர்கள் அறையின் கதவை திறந்து பார்த்தபோது அனீஸ் உள்ளே இருந்துள்ளார். இதுகுறித்து இரணியல் காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது. இருதரப்பையும் வரவழைத்து போலீசார் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். அப்போது அனீஸ் இனிமேல் சுபிதாவுடனான உறவை துண்டித்துக் கொள்வதாக கூறி சென்றுள்ளார். இதை அடுத்து அருண் பிரசாத் மனைவியை கோயம்புத்தூர் அழைத்துச் சென்று விட்டார். அங்கிருந்தே சுபிதா, அனீஸை கோயம்புத்தூருக்கு வரவழைத்து அவருடன் சென்ற சம்பவமும் நடந்துள்ளது.



குமரி மாவட்டம் சுசீந்திரம் பேரூராட்சி அலுவகத்தில் பணிபுரியும் தூய்மை பணியாட்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் துவங்கியது.இதனை மாவட்ட ஆட்சியர் அழகு மீனா துவக்கி வைத்தார்.பேரூராட்சி தலைவி அனுசுயா தலைமை தாங்கினார்கள் உடன் தெற்கு ஒன்றிய செயலாளர் பாபு சுசீந்திரம் பேரூர் செயலாளர் சுதை சுந்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.காலை உணவாக உயர் தரம் வாய்ந்த இட்லி, வடை, தேநீர் உள்ளிட்டவை தினந்தோறும் வழங்கப்படுகிறது.திட்டத்தின் முதல் நாள் என்பதால் வடை பாயசத்துடன் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

# திருவெண்ணெய்நல்லூரில் திமுக மேற்கு மற்றும் மத்திய ஒன்றியம் சார்பில் செயல்வீரர்கள் கூட்டம்



திருவெண்ணெய்நல்லூர்.பிப்.10–

விழுப்புரம் திமுக தெற்கு மாவட்டம் திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவெண்ணெய்நல்லூரில் திமுக மேற்கு ஒன்றியம் மற்றும் மத்திய ஒன்றியம் சார்பில் செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் ஒன்றிய செயலாளர்கள் பி.வி.ஆர்.விசுவநாதன், கை.ரா.சடகோபன், தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில் அதிகப்படியான வாக்கு வித்தியாசத்தில் திமுக வேட்பாளரை வெற்றி பெற செய்ய வேண்டும் என்றும், மேலும் நாளை 11–ம் தேதி சென்னையில் நடைபெறும் பி.எல்.ஏ–2, பி.எல்.சி., மற்றும் பி.டி.ஏ., மாநாட்டில் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இதில் ஓம்சிவசக்திவேல், பக்தவச்சலூ, மோகன், கிருஷ்ணமூர்த்தி, காசி.விஸ்வநாதன், ஏழுமலை, மாதவன், கிருஷ்ணராஜ், டாக்டர்.காவியவேந்தன், சி.டி.பாலு, நிர்மல்ராஜ், வெங்கடேசன், ராஜ்மோகன், விஸ்வநாதன், அருள்ஜோதி, சந்துரு, அஸ்வத்தாமன், வாசு, ஞானதேவா, குமரவேல், பரசுராமன், குணா, பார்த்தசாரதி, சித்தானந்தன் உள்ளிட்ட திமுக மேற்கு மற்றும் மத்திய ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# உழவர் பெருந்தலைவர் சி.நாராயணசாமி நாயுடு 102வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!



திருப்பூர், பிப்.10-

திருப்பூர் பிரிட்ஜ்வே காலனியில் உழவர் பெருந்தலைவர் சி .நாராயணசாமி நாயுடு 102 வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு திருப்பூரில் அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் பொதுக்கூட்டம் பிரிட்ஜ்வே காலனியில் உள்ள தலைமை அலுவலகத்தில் நடைப்பெற்றது. நேற்று இரவு 7 மணியளவில் நடைப்பெற்ற பொதுக்கூட்ட விழாவினை சங்கத்தின் தலைமை ஆலோசகர் சென்னியப்பன் தலைமையேற்றுத் துவங்கி வைத்தார்.

சிறப்பு விருந்தினராக கோவை காமாட்சிபுரி ஆதீன நடராஜ ஸ்வாமிகள் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார் .

மாநில இயற்கை வேளாண்மைப் பிரிவுத் தலைவர் முத்துச்சாமி அவர்கள் வாழ்த்துரையில் இயற்கை விவசாயத்தை முழு மனதோடு அனைவரும் ஏற்க வேண்டும், போராட்ட குணம் என்பது விவசாயிகளுக்கிடையே உணர்வுகளில் ஒன்றியிருக்கிறது ஒற்றுமைதான் நம்முள் ஓங்க வேண்டுமென கேட்டுக்கொண்டார் .சங்க பேச்சாளர் முகவைக்கண்ணன் நாராயணசாமி அவர்களுடைய அரசியல் நிகழ்வைப் பகிர்ந்துகொண்டார் .கிழக்கு மாவட்ட தலைவர் ஸ்ரீனிவாசன்,

ஆன்மீக பிரிவுத் தலைவர் முருகானந்தம், தாராபுரம் மேற்கு ஒன்றிய தலைவர் இரமேஷ்குமார், மாநில ஊடகப் பிரிவு செயலாளர் குருநாதன், 25 வது வார்டு தொழிலாளர்பிரிவு தலைவர் இரமேஷ்,வீரலட்சுமி,அன்னக்கொடி, சாரதா உள்ளிட்ட தலைமை நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர்

முன்னதாக கலைமாமணி இராதாகிருஷ்ணன் தலைமையில் வீரவர்மன் சிலம்பாட்டக் குழுவினர் நிகழ்ச்சிகள், கியோகுஷின் கராத்தே மாஸ்டர் குமரவேல் முருகேஷ் தலைமையில் கராத்தே விழிப்புணர்வு,சக்ஸஸ் அகாடமி பள்ளி குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன .இரவு 9 மணியளவில் பூராண்டம்பாளையம் மணி பரமகுருசாமி தலைமையிலான வள்ளிக்கும்மி கலை நிகழ்சிகளும் நடைபெற்றன நிகழ்ச்சியினை ஹேமப்பிரியா தொகுத்து வழங்கினார் . தலைமை நிலைய செயலாளர் நாகேந்திரன் அவர்களின் நன்றியுரையோடு சி.நாராயணசாமி நாயுடு 102 வது பிறந்த நாள் பொதுக்கூட்டம் இனிதாய் நிறைவுற்றது.

# தஞ்சாவூரில் வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.3 கோடியில் விளையாட்டு உபகரணங்கள்

## மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் வழங்கினார்



தஞ்சாவூர் பிப்ரவரி.10-

தஞ்சாவூரில் வீரர் வீராங்கனை களுக்கு ரூபாய் 3 கோடியில் விளையாட்டு உபகரணங்களை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் வழங்கினார்

2024 -25 நிதியாண்டிற்கான இளைஞர் நலம் மற்றும் விளையாட் டு மேம்பாட்டு துறையின் மானிய கோரிக்கையின் போது டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை விரிவு படுத்தி அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய நகர் ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும் என சட்டசபையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவித்தார்

இதையடுத்து இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை சார்பில் நகர் புற உள்ளாட்சி களுக்கான டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கு விழாவை திருச்சியில் இருந்து துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின்.காணொளி காட்சி மூலம் தொடங்கி வைத்தார்

இதைத்தொடர்ந்து தஞ்சாவூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விளையாட்டு உபகரணங்களை துரை. சந்திரசேகரன் எம் எல் ஏ, துணை மேயர் அஞ்சுகம் பூபதி முன்னிலையில் கலெக்டர் பிரியங்கா பங்கஜம் வழங்கினார்

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 2மாநகராட்சிகள், 3 நகராட்சிகள் மற்றும் 19 பேரூராட்சிகளில் உள்ள 459 வார்டுகளுக்கு தலா ரூபாய் 44,000 மதிப்பிலான 30 விளையாட் டுகள் உபகரணங்கள் என 732 தொகுப்பிற்கு ரூபாய் 2 கோடியே 92 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது

நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையர் கண்ணன், மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு நல அலுவலர் டேவிட் டேனியல், சர்வதேச தடகள வீராங்கனை ரோசிமீனா, மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் கற்பகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்




# நாகர்கோவிலில் 8 மாதத்திற்கு முன்பு வாலிபர் மர்ம சாவு : கொலை வழக்காக மாற்றம் - 4பேர் கைது

நாகர்கோவில், பிப்.10-

நாகர்கோவில் வடசேரி பகுதியை சேர்ந்தவர் கார்த்திக் (36) கேமராக்கள் பழுது தீர்க்கும் செய்து வந்தார். கடந்த ஜூலை மாதம் 19 ஆம் தேதி கார்த்திக் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இது குறித்து வடசேரி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வந்தனர். இந்த நிலையில் கார்த்திக் சாவில் சந்தேகம் இருப்பதாக அவரது தாயார் தங்கம் என்பவர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டிடம் மனு அளித்திருந்தார்.

இது குறித்து விசாரிக்க மாவட்ட எஸ்பி ஸ்டாலின் உத்தரவிட்டார். இந்த நிலையில் கார்த்திக் பிரேத பரிசோதனை அறிக்கையை கைப்பற்றி விசாரணை மேற்கண்ட போது, அவரது உடலில் காயங்கள் இருந்தது தெரிய வந்தது. சம்பவம் நடந்த அன்று கார்த்திக்கிடம் அதே பகுதியை சேர்ந்த சிலர் தகராறில் ஈடுபட்டது தெரிய வந்தது.

போலீசார் அந்த பகுதியை சேர்ந்த மணிகண்டன் (46), முத்துக்குமார் (34), ஜெய்சிங் (45), வளன் (46) ஆகிய 4பேரை பிடித்து விசாரித்த போது, சம்பவத்தன்று கார்த்திக் குடித்துவிட்டு தகராறு ஈடுபட்டு தாக்குதல் கூறினார்கள். அப்போது கார்த்திக்கு தவறி கீழே விழுந்ததாகவும், அனைவரும் வீடு சென்ற தாவும் கூறினர். மேலும் இது திட்டமிட்ட கொலை அல்ல எனவும் கூறினர். பின்னர் தனித்தனியாக விசாரணை மேற்கொண்ட போலீசார் அவர்களை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நான்கு பேரை கோர்ட்டில் ஆஜர் படுத்தி ஜெயிலில் அடைத்தனர். இந்த வழக்கில் மேலும் ஒருவர் தலைமுறைவாகியுள்ளார். அவரை பிடிக்கவும் போலீஸ் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

# இளையான்குடி அருகே மனித உரிமைகள் பிரிவு சார்பில் விழிப்புணர்வு முகாம்



இளையான்குடி, பிப்.10-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியை அடுத்துள்ள கண்ணமங்கலம். கிராமத்தில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவ பிரசாத் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாவட்ட காவல்துறை மற்றும் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு சார்பில் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இதில் 70-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

முகாமில் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு புள்ளியியல் ஆய்வாளர் வி. கண்ணதாசன் பேசும் போது; சமூகத்தில் நடக்கும் பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் எவ்வாறு தீர்வு கண்டு நீதி பெறுவது என்பது பற்றியும் மனிதர்களுக்கு சட்டரீதியாக என்னென்ன உரிமைகள் இருக்கிறது என்பது பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். பின்னர் சமூக ஒற்றுமை சாலைப் பாதுகாப்பு செல்போன் விழிப்புணர்வு சைபர் கிரைம் போக்சோ சட்டங்கள் மற்றும் கல்வியின் அவசியம் பற்றியும் அவர் விவரித்தார். நிகழ்வில் தலைமை காவலர் பாலமுருகன் சுபாஷினி பள்ளியின் ஆசிரியர்கள் பிரபு முருகன் ஆனந்தி ஆகியோரும் கலந்து கொண்டனர். முகாமின் நிறைவில் கலந்து கொண்டவர்களுக்கு பிஸ்கட் - தேநீர் வழங்கப்பட்டது. முகாமிற்கான ஏற்பாடுகளை பள்ளியின் தலைமை ஆசிரியர் (பொறுப்பு ) தாசன் சிறப்பாக செய்திருந்தார்.

# பொது அறிவிப்பு

ந.க.4220/2025/அ 5 நாள் : 30.01.2026

இந்திராணி க/பெ.ராசு, மெயின் ரோடு, புதுக்கோட்டை உள்ளூர் கிராமம், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

–மனுதாரர்

இல்லை

–எதிர் மனுதாரர்

அறிவிப்பு

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் மேற்படி முகவரியில் வசிக்கும் இந்திராணி ஆகிய நான் கொடுக்கும் அறிவிப்பு என்ன வென்றால், எனது கணவர் ராசு த/பெ.துரைசாமி என்பவர் கடந்த 11.10.2005 ம் தேதி மேற்படி முகவரியில் இறந்து விட்டார். அவரது இறப்பை அறியாமையினாலும், கவனக் குறைவினாலும் பதிவு செய்ய தவறி விட்டேன். எனவே தற்போது காலதாமத கட்டணத்துடன் பதிவு செய்ய உத்தரவிட வேண்டுமாய் பட்டுக்கோட்டை, வருவாய் கோட்டாட்சியர் முன்பு மனு செய்திருந்தேன். அம்மனு விசாரணையில் உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இவ்வறிவிப்பு நாள் முதல் 15 நாட்களுக்குள் கனம் பட்டுக்கோட்டை, வருவாய் கோட்டாட்சியர் முன்பு ஆஜராகி ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. தவறினால் மனு அனுமதிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர்

R.இந்திராணி

# குமரி பேரூராட்சி தூய்மை பணியாளர்களுக்கு உணவு திட்டம் : கலெக்டர், அமைச்சர் வழங்கினார்கள்



நாகர்கோவில், பிப்.10–

மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் விரிவாக்கத்தை தமிழக முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து குமரி மாவட்டத்திற்குட்பட்ட 50 பேரூராட்சிகளில் பணிபுரியும் 1316 தூய்மைப் பணியாளர்களுக்கு உணவுகள் நேற்று முதல் வழங்கப்பட்டது.

நாகர்கோவில் பறக்கை எம்.டி.பி.சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்ற உணவு வழங்கும் நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சி தலைவர் அழகு மீனா தலைமை வகித்தார். பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் உணவு வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்து கூறியதாவது:-

தூய்மை பணியாளர்களுக்கு உணவு கொடுக்கின்ற இந்த அற்புதமான திட்டம், உண்மையிலேயே ஒரு பெரிய மகத்தான திட்டமாகும். கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட நாகர்கோவில் மாநகராட்சியில் பணிபுரியும் 1372 தூய்மை பணியாளர்களுக்கும், குழித்துறை நகராட்சியில் பணிபுரியும் 108 தூய்மை பணியாளர்களுக்கும், பத்மநாபபுரம் நகராட்சியில் பணிபுரியும் 111 தூய்மை பணியாளர்களுக்கும், குளச்சல் நகராட்சியில் பணிபுரியும் 91 தூய்மை பணியாளர்களுக்கும், கொல்லம்கோடு நகராட்சியில் பணிபுரியும் 187 தூய்மை பணியாளர்களுக்கும், கன்னியாகுமரி நகராட்சியில் பணிபுரியும் 82 தூய்மை பணியாளர்களுக்கும், 50 பேரூராட்சிகளில் பணிபுரியும் 1316 தூய்மைப் பணியாளர்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டது என கூறினார். நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ், ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் மேரி பிரின்சி லதா, அலுவலர்கள், பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நாகர்கோவிலில் ஓடும் ரயிலில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் மகனிடம் லேப்டாப் திருடியவர் கைது

நாகர்கோவில், பிப்.10–

திங்கள்சந்தை பகுதியை சேர்ந்தவர் ஜெலஸ்கின். இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் போலீஸ் சிறப்பு சப்–இன்ஸ்பெக்டராக பணியாற்றி வருகிறார். இவரது மகன் அஸ்கர் (23). இவர் மதுரையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். அஸ்கர் விடுமுறை எடுத்துக்கொண்டு மதுரையில் இருந்து ரயிலில் நாகர்கோவிலுக்கு புறப்பட்டு வந்தார். அப்போது அவர் ரயில் நிலையத்தில் வந்து இறங்கிய போது அவர் வைத்திருந்த ரூ. 40 ஆயிரம் மதிப்பிலான லேப்டாப்பை காணவில்லை. லேப்டாப்பை மர்ம நபர்கள் திருடி சென்றது தெரியவந்தது.

இது குறித்து அஸ்கர் நாகர்கோவில் ரயில்வே போலீசில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். அந்த பகுதியில் உள்ள சிசிடிவி கேமராவின் காட்சிகளை போலீசார ஆய்வு செய்தனர். அப்போது வாலிபர் ஒருவர் அஸ்கர் லேப்டாப்பை திருடி செல்வது போன்ற காட்சி பதிவாகி இருந்தது. அதன் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டு, தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி பகுதியை சேர்ந்த ராஜா (43) என்பவரை போலீசார் கைது செய்தனர். அவரிடம் இருந்து லேப்டாப் பறிமுதல் செய்யப்பட்டது. ராஜாவை கோர்ட்டில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# வருங்கால தலைமுறையை காக்க பெண்கள் அனைவரும் அன்புமணிக்கு ஆதரவு தர வேண்டும்

## தருமபுரியில் சௌமியா அன்புமணி பேச்சு



தருமபுரி, பிப்ரவரி .10-

பசுமைத் தாயகத்தின் தலைவர் செளமியா அன்புமணி சிங்கப் பெண்ணே எழுந்து வா என்ற தலைப்பில் தமிழக மகளிர் உரிமை மீட்பு பயணம் தமிழகம் முழுவதும் மாவட்டம் வாரியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார் அந்த வகையில் தருமபுரி வன்னியர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் தருமபுரி மாவட்டம் முழுவதும் சென்று வந்ததை நினைவு கூர்ந்தார். 2014 நாடாளுமன்ற தேர்தலில் அன்புமணிக்கு வெற்றியை கொடுத்த மாவட்டம் தருமபுரி மாவட்டம். தருமபுரி மாவட்டத்தில் நாலரை லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளது. அவற்றில் பாதி நீர் பாசன நிலங்கள் வானம் பார்த்த பூமியாக உள்ளது. விவசாயம் செழிக்க காவிரி உபநீர் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அதனை செயல்படுத்த ரூ. 650 கோடி ஒதுக்க தமிழக அரசு மறுக்கிறது. ஒகேனக்கல் கூட்டு குடிநீரை தருமபுரி மாவட்டத்திற்கு பெற்றுத் தந்தது பாமக தான் என நினைவு கூர்ந்தார். தருமபுரி மாவட்டத்தில் சிப்காட் அமைக்க நிலம் கையகப்படுத்தி நீண்ட வருடங்கள் ஆகியும் இதுவரை சிப்காட் தொழிற்சாலைகள் தருமபுரிக்கு வரவில்லை என குற்றம் சாட்டினார். மற்ற மாவட்டங்கள் 20% வளர்ச்சியில் உள்ளது ஆனால் தருமபுரி மாவட்டம் 8 சதவீத வளர்ச்சி மட்டுமே உள்ளது. 108 ஆம்புலன்ஸ், தருமபுரி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி, தருமபுரி மொரப்பூர் ரயில் பாதை திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியது என பல்வேறு நல்ல திட்டங்களை கொண்டு வந்தவர் அன்புமணி. தமிழகம் கஞ்சா, மது புழக்கம் அதிகரித்து வருகிறது. இதனை தமிழக அரசு தடுக்க தவறிவிட்டது. வருங்கால தலைமுறையை காக்க பெண்கள் அனைவரும் அன்புமணி பின்னால் வாருங்கள் இவ்வாறு அவர் பேசினார்.

# விளாத்திகுளத்தில் காங்கிரஸ் செயல்வீரர்கள் கூட்டம்!



விளாத்திகுளம் பிப்ரவரி.10–

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது இதில் அக்கட்சியின் வடக்கு மாவட்ட தலைவர் பெருமாள்சாமி கலந்து கொண்டு பேசுகையில்

யாரும் நம்மை ஏமாற்ற முடியாது. முதுகில் குத்த முடியாது. குத்தினால் திரும்ப முதுகில் குத்தி விடுவோம், இனி வருங்காலங்களில் காங்கிரஸ் கட்சிக்காரர்களை யாரும் ஏமாற்ற முடியாது, இவ்வளவு நாள் ஏமாந்து விட்டோம் இனி ஏமாற மாட்டோம் ஏமாற விடமாட்டோம். கடந்த முறை உள்ளாட்சித் தேர்தலில் நமக்கு கூட்டணியில் 20% தருவதாக தெரிவித்திருந்தனர் ஆனால் ஏமாற்றி விட்டனர்,

2029 இல் ராகுல் காந்தி நிச்சயமாக பிரதமராக வருவார். பாஜக சுவரை முட்டிவிட்டது. அது கீழ விழப்போகுது உலகத்தின் தீய சக்தி பாஜக தான். பாஜக அழியப்போகிறது.

காங்கிரஸ் இல்லையென்றால் நாடு துண்டாடப்படும். இன்றைக்கு காங்கிரஸ் கட்சியை நம்பி ஒவ்வொரு கூட்டணிக் கட்சியினரும் எங்க கிட்ட வாங்க வாங்க என்று ஏங்குகின்றனர், இன்றைக்கு இளம் தலைவராக விஜய் வந்துள்ளார். உண்மையில் அவருக்கு ஆதரவு நல்லா இருக்கிறது இல்லை என்று சொல்லவில்லை

தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் அனைத்து பூத்துக்களிலும் ஆட்கள் போடுவோம். போடவில்லை என்றால் காதை அறுத்து காட்டுகிறேன் என்று பேசினார்.

இந்த நிகழ்வில் காங்கிரஸ் கட்சியின் விளாத்திகுளம் பொறுப்பாளர் பெத்துராஜ், விளாத்திகுளம் நகரச் செயலாளர் ஞானராஜ், மேற்கு வட்டாரத் தலைவர் போத்திராஜ் மற்றும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.